## வீதி வலையமைப்பு முன்னேற்ற முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் - 1 -- 2012

### 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2 நிதிக் கூற்றுக்கள்

#### 2.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 5,570.88 மில்லியனானதுடன 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 13,413.69 மில்லியனாகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பை பின்வரும் கூற்று காட்டுகிறது.

| செலவின விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2012 | 2011 | |
| | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் |
| நிலையான சொத்துக்கள் | 1.45 | 0.07 | 1.52 |
| வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாற்றப்பட்ட நிலையான சொத்துக்கள் | 3.39 | - | 3.39 |
| நடைபெறும் வேலைகள் | 8,633.86 | 2,930.36 | 11,564.22 |
| நாணய மாற்று வேறுபாடுகள் | - | (31) | - |
| முற்பணங்களும் முற்கொடுப்பனவுகளும் | (3,068.24) | 4,912.38 | 1,844.14 |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 0.42 | - | 0.42 |
| | 5,570.88 | 7,811.81 | 13,413.69 |

## 3. கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பீஓகியூ ஊடாக ரூபா 37,621,540 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட 10 பயணிகள் போக்குவரத்து வாகனங்களின் பெறுமதி செயற்திட்டத்தின் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காட்டப்படுவதற்குப் பதிலாக சிவில் வேலைகளின் நடைபெறும் வேலைகளின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

### 3.1.2 காணி சுவீகரிப்பு

ஆர்டிஏ/ஆர்என்ஜபீ/பீஆர்பீ1/சீ1ஏ-3 ஆம் இலக்க ஒப்பந்தத்தின் காணிச் சுவீகரிப்பில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டதுடன் 9 காணித் துண்டுகள் 2013 மே 10 இல் உள்ளவாறும் சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை. காணிகளை ஒப்பந்தகாரருக்கு கையளிபதிலுள்ள தாமதம் கால நீடிப்பையும் மேலதிக கிரயத்தையும் ஏற்படுத்துவதற்கு காரணமாகாலாம்.

### 3.1.3 மனிதவள முகாமைத்துவம்

பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 2007 ஏப்ரல் 5 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின்படி செயற்திட்டத்தின் பதவியணியினர் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். செயற்திட்டத்தின் பதவியணி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் ஆலோசனையாளர்கள் உரிய அங்கீகாரங்கள் பெற்றுக்கொள்ளாமல் சேர்க்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 1,480,000 தொகையான வேதனங்கள் செலுத்தப்பட்டிருந்தன. அந்த ஆலோசனையாளர்களின் நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டவாறு வேலை விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த ஆலோசனையார்களிடமிருந்து செயற்திட்டத்திற்கான நலன விளைவு புரி அளவு மற்றும் பங்களிப்பு என்பவற்றை கணக்காய்வில் மதிப்பிட முடியாதிருந்தது.

### 3.1.4 செயற்திட்ட நடவடிக்கைகளின் தர உறுதிப்பாடு

சீ1ஏ-3 ஆம் இலக்க சிறிபோபுர மேம்பால நிர்மாண ஒப்பந்தம் தொடர்பில், ஒரு பாரந்தாங்கி கம்பத்தின் பிளாங்கி வெப் சந்தியின் தாங்கு சுவரில் மயிரிழை வெடிப்புகள் மற்றும் மேற்பரப்பில் குறைபாடுகள் என்பன அவதானிக்கப்பட்டன. இந்த நிலைமை ஒப்பந்தகாரர் வேலைகளிற்காக அனுமதித்த முறைகளைப் பின்பற்றியிருக்கவில்லை என்பதைக் காட்டுகிறது.

### 3.1.5 ஒப்பந்த நிர்வாகம்

அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 4.3.1 ஆம் பிரிவின்படி, ரெலக்கொம் கேபிள்களின் அகற்றல் மற்றும் மீள்பொருத்துகைகளிற்கான அளவீட்டுப் பட்டியலிற்கு ரெலிக்கொம் வரி மற்றும் செஸ்வரி என்பவற்றிற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. சீ1ஏ-1 ஆம் இலக்க ஒப்பந்தத்தில் ஹம்பாந்தோட்டை சிறிபோபுர சந்தியுடன் இருக்கும் ரெலிக்கொம் வலையமைப்பின் அகற்றல்

மற்றும் மீள்பொருத்துகைகளிற்காக மேற்குறிப்பிட்ட வரிகளாக இலங்கை ரெலிக்கொம்மிற்கு ரூபா 298,138 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 3.1.6 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(1) சீ-6ஏ கண்டி- மஹியங்களை-பதியத்தலாவை வீதி புனரமைப்பின் போது ஒருபெண்டிவேவா தேசிய பாடசாலையின் எல்லைச் சுவர் சேதமதைந்திருந்தது. புனர்நிர்மாணம் செய்யவேண்டிய எல்லைச் சுவரின் நீளம் 94 மீற்றர்களாக இருந்தது, அதேயளவு நீளத்திற்கே காப்புறுதிக் கம்பனி இழப்பீடு வழங்கியிருந்தது. மதிப்பீடு செய்யப்பட்ட புனர்நிர்மாண கிரயத்தின் மொத்தத் தொகை ரூபா 843,621 ஆக இருந்ததுடன் காப்புறுதிக் கம்பனியால் லெுத்தப்பட்ட உள்ளபடியான தொகை ரூபா 572,338 ஆக இருந்தது. ரூபா 271,233 தொகையான மிகுதி ஒப்பந்தகாரரால் பெறப்பட்டிருக்க வேண்டிய போதிலும் ஒப்பந்த உடன்படிக்கையின் ஒப்பந்த ரீதியான கடப்பாடு இல்லாமையால் இது செயற்திட்டத்தால் பெறப்பட்டிருந்தது. மேலும், எல்லைச் சுவரை நிர்மாணிப்பதற்கு 11 மாதங்கள் எடுத்திருந்தது.

(2) சீ1ஏ-2 ஆம் இலக்க கிரிப்போனர – உடமவுர வீதி ஒப்பந்தத்தில் நோக்கெல்லையில் மாற்றங்கள் எடுக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. ஆரம்ப மதிப்பீட்டில் வேண்டப்பட்ட 2 வரிசைகளிற்கு பதிலாக நான்கு வரிகைளின் வேண்டுகைகளாக சீஎச் 0+000 கிமீ முதல் சீஎச் 6+000 கிமீ வரையான வீதிப் பிரிவின் நோக்கெல்லையில் மாற்றங்கள் செய்யப்பட்டதுடன் ஒப்பந்தகாரரின் கிரய உத்தேசம் பெற்ற பின்னர் போபால சந்தியில் உள்ள கடப்பு வழி நீக்கப்பட்டது. இருக்கின்ற கடப்புவழி அகலமாக்குவதற்காக வரைவுகள் மற்றும் நீக்கலிற்கான காரணங்கள் என்பன கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. போபல சந்தி- உடமாவுர வீதி பிரிவில் வேண்டப்பட்ட முரண் அறிமுகம் செய்யப்பட்டமை காரணமாக செயற்திட்ட முகாமைத்துவ அலகால் நோக்கெல்லையின் மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தது. மேலும், ஆரம்ப மதிப்பீடுகளின் நோக்கெல்லையில் மாற்றங்கள் காரணமாக, கிரயம் ரூபா 415 மில்லியன் அல்லது 52.14 சதவீதத்தால் அதிகரித்திருந்தன. கொள்வனவு வழிகாட்டலின் 8.13.4 ஆம் பிரிவின்படி, செயற்திட்டம் வடிவமைப்பு கட்டத்தில் ஏன் கண்டு

பிடிக்கப்பட்டிருக்கவில்லை என்பதற்கான விளக்கம் தரப்பட்டிருக்கவில்லை. இந்நிலைமை செயற்திட்டத்தின் நலிந்த ஒப்பந்த முகாமையை காட்டுகின்றது.

(3) ஒப்பந்தகாரரின் முன்னேற்றத்தை பாதகமாக பாதித்திருந்த சீ1ஏ-3 ஆம் இலக்க சிறிபோபுர மேம்பால ஒப்பந்தம் தொடர்பான காணிசுவீகரிப்புகள் மற்றும் பயன்பாட்டு சேவைகளின் மீளமைத்தலிற்காக முறையான கால அட்டவணை செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், பயனபாட்டு சேவைகளின் மாற்றுதலிற்கான கொடுப்பனவுகள் ஒப்பந்தகாரருக் கூடாக செய்யப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தகாரர் பின்னர் செயற்திட்டத்திலிருந்து மேலதிக இலாபம் மற்றும் மேந்தலைகளுடன் இடைக்கால கொடுப்பனவு சான்றிதழில் அத்தகைய கொடுப்பனவுகளை அறவிட்டிருந்தனர்.

## 3.2 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டு மற்றும் 2012 திசெம்பர் 31 வரையான காலத்திற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வு காலப்பகுதிக்கான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் வசதி உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்டதொகை | | 2012 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2012 ஆம் ஆண்டின் போது பயன்படுத்திய நிதிகள் | 2012 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | % |
| சீடிபீ | 152.8 | 15,280 | 6,925.47 | 6,884.99 | 10,268.10 | 67.19 |
| இலங்கை அரசாங்கம் | 17.0 | 1,700 | 592.98 | 592.97 | 1,413.71 | 83.16 |
| | 169.8 | 16,980 | 7,518.45 | *7,477.96 | *11,681.81 | 68.79 |

* அட்டுறு செலவினம், பிடிகாசு, வெளிநாட்டு நாணயமாற்றுவீத வித்தியாசம் மற்றும் உள்ளக நடைமுறை கொடுக்கல் வாங்கல்கள் என்பன உள்ளடக்காமை காரணமாக இந்த அறிக்கையின் 2.1 ஆம்

பந்தியில் காட்டப்பட்ட தொகைகளிலிருந்து இந்தத் தொகைகள் வித்தியாசப்படுகின்றன.

## 3.3. நிதிசார மற்றும் பௌதீக செயலாற்றல்

கடன்வசதி உடன்படிக்கையின்படி, சீன அபிவிருத்தி வங்கி ஒத்துழைப்பு வீதி முன்னேற்றம் மற்றும் புனரமைப்பு வேலைகளிற்காக ஆறு ஒப்பந்த பொதிகளை மேற்கொள்வதற்கென ஐ.அ.டொலர் 152.8 மில்லியனை ஒதுக்கியிருந்ததுடன் வடிவமைப்பு மாற்றங்கள் மற்றும் மேலதிக வேலைகளின் முரண்கள் போன்ற அத்தகைய வேலை நோக்கெல்லையில் பெரும் எண்ணிக்கையான மாற்றங்கள் அமுலாக்கின் போது செய்யப்பட்டிருந்தமை மேற்குறிப்பிட்ட மாற்றங்களின் விளைவாக ஒப்பந்தங்களின் உறுதிசெய்யப்பட்ட பூர்த்தியாக்கல் திகதிகள் நீடிக்கப்பட்டிருந்தன. கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த ஒப்பந்த பொதிகளின் பௌதீக முன்னேற்றம் கீழே காட்டப்படுகின்றது.

| ஒப்பந்த இல | ஒப்பந்தத்தின் பெயர் | ஒப்பந்த தொகை | உள்ளபடியான கிரயம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில் | ரூபா மில் | இலக்கு % | உள்ளபடி % |
| சீ1ஏ | (i) பெலியத்தை - தங்காலை வீதி | 1,350 | 1,380 | 100 | 95 |
| | (ii) பொபேபேல – கிரிபனறா-உடமவுறரட வீதி<br>(iii) சிறிபோபுர சந்தியில் மேம்பாலம் | 2,675 | 1,846 | 100 | 72 |
| சீ2ஏ | பெலவத்தை-கன்கோடியாவத்தை – தின்னியாவல-மொரவாக வீதி (47 கிமீ) | 3,900 | 1,235 | 71 | 44 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சீ3 | திருவானகெட்டிய-அகலவத்தை வீதி (0-033.45 கிமீ) | 2,800 | 1,005 | 51 | 38.5 |
| சீ6ஏ | கண்டி – மஹியங்கனை-பதியத்தலாவை வீதி | 1,550 | 1,215 | 100 | 90.2 |
| சீ8 | கல்குடா வாழைச்சேனை வீதி | 700 | 610 | 100 | 100 |
| சீ11 | பரந்தன்- முல்லைத்தீவு வீதி (52.13 கிமீ) | 5,700 | 3,920 | 41.36 | 63.79 |